# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

***8th பிப்ரவரி / February 2026 ஞா யிறு ஆராதனை***

***Discipleship & Nurture Sunday***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — ***திரு. ஜேம்ஸ் ராஜ்***
Call to Worship — Mr.James Raj

**இறைவணக்கப்பாடல்** — ***பாடகர் குழு***
Introit — Choir

**ஜெபம்** — ***திரு. ஜேம்ஸ் ராஜ்***
Prayer — Mr.James Raj

✝ **தொடக்க பாடல்** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

**திவ்விய ஐக்கியத்தில் நடப்போமேயாகில்**

*1. திவ்விய ஐக்கியத்தில் நடப்போமேயாகில்*
*அருள் ஜோதியிலே நிலைப்போம்*
*வல்ல ஆவியினால் தேவ சித்தஞ் செய்தால்*
*பெரும் பாக்யம் பெற்றே வாழுவோம்*

**கீழ்ப்படிவோம் தேவசித்தம் செய்வோம்**
**திருவாக்கை எப்போதும் நம்பி கீழ்ப்படிவோம்**

*2. மேகம் தோன்றுமானால் அன்பின் சூரியனால்*
*அது நில்லாமல் மறைந்தேபோம்*
*சோர்வு சந்தேகமும், அவநம்பிக்கையும்*
*அணுகாமலே முன் செல்லுவோம்*

*3. எந்த வேளையிலும், இன்ப துன்பத்திலும்*
*அருள்நாதர் சகாயஞ் செய்வார்*
*வரும் சோதனையோ, மன சஞ்சலமோ*
*இவை நீக்கியே பாதுகாப்பார்.*

*4. நம்பி கீழ்ப்படிந்தே திருப்பாதத்திலே*
*நம்மை முற்றிலும் ஒப்புவிப்போம்*
*பெருநன்மை ஈவார் அபிஷேகஞ் செய்வார்*
*தேவ ஆவியைப் பெற்றுக்கொள்வோம்*

*5. கர்த்தரோடின்பமாய், அந்நியோந்நியமாய்*
*நீங்காமலே வாசஞ் செய்வோம்*
*அவர் சொற்படியே உண்மையோடுடனே*
*மனோற்சாகமாய் கீழ்ப்படிவோம்.*

✝ **மாறி வாசித்தல் 6ம் ஞாயிறு** — ***சபையார் இணைந்து***
*"சங்கீதம் 22"* — Congregation

**"என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"**
Psalter Reading "Psalm 22"

✝ **தந்தை போற்றி** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**இஸ்ரவேல் என் ஜனமே என்றும்**

**இஸ்ரவேல் என் ஜனமே என்றும்**
**இடறிட வேண்டாம்**
**இயேசுவே உன் தெய்வமானால்**
**ஏதும் பயம் வேண்டாம்**

*1. ஓங்கும் புயமும் பலத்த கரமும்*
*உன் பக்கமே யுண்டு*
*தாங்கும் கிருபை தயவு இரக்கம்*
*தாராள மாயுண்டு.*

*2. பார்வோன் கைக்கு விடுத்த மீட்ட*
*பஸ்கா ஆட்டுக்குட்டி*
*ஆரோன் மோசே என்னும் நல்ல*
*ஆசாரியர் உண்டு.*

*3. செங்கடலில் வழி திறந்த*
*சீயோன் நாயகனே*
*பங்கமின்றி பாலைவனத்தில்*
*பராமரித்தாரே.*

*4. சத்துருக்களை சிதற அடித்த*

*சர்வ வல்ல தேவன்*
*யுத்தத்தில் உன் முன்னே நின்று*
*ஜெய மெடுத்தாரே*

*5. பயப்படாதே சிறுமந்தையே*
*பார் தான் உன் மேய்ப்பன்*
*தியங்காதே மனம் கலங்காதே -உன்*
*தேவன் தினம் காப்பேன்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. கோஹிலா***
***2 தீமோத்தேயு 2 : 1 - 7*** — Mrs. Kohila
Scripture Reading
2 Timothy 2 : 1 - 7

***அருளுரை*** — ***மறைதிரு. ஜெபகுமார்***
Sermon — Rev. Jebakumar

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Closing Song — Congregation

*<u>மான்கள் நீரோடை வாஞ்சித்து</u>*

**மான்கள் நீரோடை வாஞ்சித்து**
**கதறும் போல் என் தேவனே**
**எந்தன் ஆத்துமா உம்மையே -**
**வாஞ்சித்து கதறுமே**

**தஞ்சமே நீர், அடைக்கலம் நீர்**
**கோட்டையும் நீர், என்றும்**
**காப்பீர்**

*1. தேவன் மேல் ஆத்துமமே*
*தாகமாயிருக்கிறது*
*தேவனின் சந்நிதியில் நின்றிட*
*ஆத்துமா வாஞ்சிக்குதே*

*2. ஆத்துமா கலங்குவதேன்*
*நேசரை நினைத்திடுவாய்*
*அவரின் இரட்சிப்பினால் தினமும்*
*துதித்துப் போற்றிடுவாய்*

*3. யோர்தான் தேசத்திலும்*
*எர்மோன் மலைகளிலும்*
*சிறு மலைகளிலிருந்தும் உம்மை*
*நிதமும் நினைத்திடுவேன்*

*4. தேவரீர் பகற்காலத்தில்*
*கிருபையை தருகின்றீர்*
*இரவினில் பாடும் பாட்டு எந்தன்*
*வாயினிலிருக்கிறது*

*5. கன்மலையான தேவன்*
*நீர் என்னை ஏன் மறந்தீர்*
*எதிரிகளால் ஒடுங்கி அடியேன்*
*துக்கத்தால் திரிவதேனோ*

*6. ஆத்துமா கலங்குவதேன்*
*தேவனில் காத்திருப்பாய்*
*அவரே என் இரட்சிப்பு தினமும்*
*அவரை துதித்திடுவாய்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verses</u> — Congregation
***சங்கீதம் 6 : 4***
Psalm 6 : 4

***4. திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/Indicates Congregation standing**